சென்னையில் நடைபெறவுள்ள மகளிர் உரிமை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திருமதி சோனியா காந்தி மற்றும் பொதுச் செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி ஆகியோரை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.10.2023) சென்னை விமான நிலையத்தில், புத்தகம் வழங்கி வரவேற்றார். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன், தயாநிதிமாறன் எம்.பி., கனிமொழி கருணாநிதி எம்.பி., தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் கே.எஸ்.அழகிரி ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழ்நாடு என்ற இம்மாநிலம் உள்ள மட்டும்

சங்கரலிங்கனார் நன்றியோடு நினைவு கூரப்படுவார்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்புதிவு!

சென்னை, அக். 15- தியாகி சங்கரலிங்கனார் நினைவு நாளையொட்டி முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் தமிழ்நாடு என்ற இம்மாநிலம் உள்ள மட்டும் சங்கர லிங்கனார் நன்றியோடு நினைவு கூரப்படுவார் என்று குறிப் பிட்டுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

அக்டோபர் 13: விருதுநகர் சங்கரலிங்கனார் நினைவுநாள்!

“வீரத்தியாகியின் நினைவு, நமக்கு உள்ளத் தூய்மையை, உறுதியை, தியாகச் சுபாவத்தைத் தருவதாக அமைதல் வேண்டும். தியாகிக்குத் தலைவணங்குவோம்! தாயகத்துக்குப் பணிபுரிவோம்!” என்றார் பேரறிஞர் அண்ணா!

தமிழ்நாடு என்ற இம்மாநிலம் உள்ளமட்டும் சங்கரலிங்கனார் நன்றியோடு நினைவுகூரப்படுவார்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப் பிட்டுள்ளார்.

புவியியல் - சுரங்கத்துறையைச் சார்ந்த

அனைத்து மாவட்ட அலுவலர்களின் செயல்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம்!

நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, அக்.15- புவியியல் மற்றும் சுரங்கத்துறையைச் சார்ந்த அனைத்து மாவட்ட அலுவலர்களின் செயல்திறன் குறித்து ஆய்வுக் கூட்டம் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (13.10.2023) நடைபெற்றது.

இவ்வாய்வுக் கூட்டத்தில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், போக்குவரத்து துறை மற்றும் இயற்கை வளங்கள் துறை க.பணீந்திர ரெட்டி, புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர் திருமதி. பூஜா குல்கர்னி மற்றும் புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிதியாண்டில் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையில் கனிம வருவாய் ரூ.817.40 கோடி ஈட்டப் பட்டுள்ளதை சுட்டிக் காட்டி இனி வரும் மாதங்களில் அதிக வருவாயினை ஈட்டிடவும் மாவட்ட வாரியாக கனிம வருவாய் விபரங்களை கேட்டறிந்த அமைச்சர் அவர்கள் கனிம வருவாயை அதிகரிக்க மேற்கொள்ள வேண்டிய ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் குறித்தும் அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் புவியியல் மற்றும் சுரங்கத்துறையினை மேம்படுத்தும் நோக்கில் அரசுக்கு கூடுதல் வருவாய் ஈட்டித்தர அனைத்து அலுவலர்களும் முழு ஒத்துழைப்புடன் செயல்பட வேண்டும் எனவும், மாவட்ட மற்றும் மண்டல அலுவலர்கள் முனைப்புடன் செயல்பட வேண்டும் எனவும், சட்டவிரோத கனி மங்களை வெட்டி எடுப்பது தொடர்பாக பெறப்படும் புகார்களின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்வதுடன் அப் பகுதிகளை கள ஆய்வு மேற்கொண்டு, விதிக ளின்படி கடுமையான நடவடிக்கை எடுக்கவும் அறிவுரை வழங்கினார்கள். மேலும் நிலுவையிலுள்ள வருவாய் இனங்களில் கவனம் செலுத்தி நிலுவை தொகையினை விரைந்து வசூலிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

அனைத்து மாவட்டங்களில் உள்ள தகுதி வாய்ந்த கல்குவாரிகளை ஏலத்திற்கு கொண்டு வருமாறும், நிலுவையில் உள்ள விண்ணப்பங்களின் மீது நடவடிக்கை மேற்கொண்டு குத்தகை உரிமம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், கனிம வருவாயினை ஈட்டவும், அனைத்து அலுவலர்களையும் கேட்டுக் கொண்டார். வாகனம் கைப்பற்றுகையை ஆய்வு செய்த அமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்ட அலுவலர்களும் குறைந்த பட்சம் மாதத்திற்கு 20 வாகனங்கள் கைப்பற்றிடவும் அனுமதியின்றி செயல்பட்ட குவாரிகள் மேல் கனிம விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், மேலும் மண்டல பறக்கும் படையினர் முனைப்புடன் செயல்பட்டு அதிக அளவில் வாகனங்களை கைப்பற்றி கனிம திருட்டினை முற்றிலும் தடுத்து மாநில அரசுக்கு அதிக அளவில் வருவாய் ஈட்டித் தருமாறும் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாட்டிற்கு காவிரியில் இருந்து

வினாடிக்கு 16 ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்க வேண்டும்!

காவிரி மேலாண்மை ஆணையத்திடம் தமிழ்நாடு வலியுறுத்தல்!

சென்னை, அக். 15- நேற்று முன்தினம் (13.10.2023) புதுதில்லியில் காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தின் 26வது கூட்டம் காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தின் தலைவர் எஸ்.கே. ஹல்தார் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசு சார்பாக நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, காவேரி தொழில் நுட்பக் குழு தலைவர் ஆர். சுப்பிரமணியம், உறுப்பினர் எல்.பட்டாபிராமன்,

உதவி செயற்பொறியாளர் திருமதி ரம்யா மற்றும் கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரி ஆகிய பிற மாநிலங்களில் இருந்து உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் தமிழ்நாடு சார்பாக பில்லிகுண்டுலிருந்து 16,000 கனஅடி தண்ணீர் திறந்துவிட வேண்டுமென காவிரி மேலாண்மை ஆணையத்தில் வலியுறுத்தப்பட்டது. இந்நிலையில் வரும் அக்டோபர் 16ம் தேதி முதல் 15 நாட்களுக்கு தமிழகத்திற்கு காவேரியில் வினாடிக்கு 3,000 கனஅடி நீர் திறக்க கர்நாடகாவிற்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

புதுடெல்லியில் காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தின் 26 வது கூட்டம் நேற்று முன்தினம் (13.10.2023) காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தின் தலைவர் எஸ்.கே.ஹல்தார் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசு சார்பாக நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, காவேரி தொழில்நுட்பக் குழு தலைவர் ஆர். சுப்பிரமணியம், உறுப்பினர் எல்.பட்டாபிராமன், உதவி செயற்பொறியாளர் திருமதி ரம்யா மற்றும் கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரி ஆகிய பிற மாநிலங்களில் இருந்து உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.